**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No. 133/2025**
**LW- 1 Examined as PW - 1**

| | |
|---|---|
| Name: முகமது ரபிக் | Age: |
| Father's Name: முகமது ஹசன்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 24.02.2026 | |

**24.02.2026**

**எதிரி ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 1.40 PM.**

**அ.சா. 1 – முதல் விசாரணை**

நான் சென்னையில் ஆர்கானிக் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் நடத்திவருகிறேன். 2025 ம் வருடம் ஏப்பரல் மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் நான் சீதாப்புறத்தில் உள்ள மாட்டு பண்ணையில் இருந்தபோது மாலை வேளையில் நீதிமன்ற ஆஜர் எதிரி முரளிகிருஷ்ணன் முதுபோதையில் மாட்டு பண்ணைக்கு வந்தார். அப்போது நான் அவரை ஏன் ஊள்ளே வருகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் அடாவடி தனமாக பேசினார். மேலும் என்னுடைய டியோ இருசக்கர வாகனத்தின் சாவியை எடுத்துக்கொண்டார். உடனே என்னுடன் பக்கத்தில் இருந்த நபர்கள் காவல் நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். சம்பவம் குறித்து நான் அன்று இரவு சாலவாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகாராகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் புகார் அளிக்கும்போது என்னுடன் யார் வந்தது என்றால் சாலவாக்கத்தை சேர்ந்த ஜெயராமன் வந்தார். புகாரினை நான் தான் எழுதினேன். சம்பவத்திற்கு முன்பு ஆஜர் எதிரியை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி எனது பண்ணைக்கு வந்ததாக தெரிவிக்கும் சமையத்தில் ஜெயராமன் அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். ஜெயராமன் என்பவர் என்னுடைய நண்பர் என்றால் சரியல்ல. வியாபார ரீதியாக 4 வருடங்களாக அவரை தெரியும். சீதாபுரம் மற்றும் சாலவாக்கம் வெவ்வேறு கிராமங்கள் என்றால் சரிதான். சீதாபுரம் மற்றும் சாலவாக்கத்திற்கு இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1 1/2 கி.மீ தொலைவு இருக்கும். போலிசார் என்னை எப்போது எங்குவைத்து விசாரணை செய்தார்கள் என்றால் எனது பண்ணையில் புகார் அளித்து ஒரு வாரத்திற்குள் விசாரணை செய்தார்கள்.

ஆஜர் எதிரியின் விவரங்கள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் காவல் நிலையத்தில் போலிசார் தெரிவித்ததன் பேரில் தெரியும்.

நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரி என்னுடைய வாகனத்தின் சாவியை எடுக்க வந்தார் என்ற விவரங்களை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி காவலராக பணியாற்றி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். சாலவாக்கம் காவல் நிலையத்தில் உள்ள காவலர்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் உள்ள பிரச்சனையைவைத்துக்கொண்டு என் மூலமாக பதியப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 1.55 PM

Sd/R.கிருத்தியா,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.